# சிரித்து மகிழ்ந்திடு

- ஆசிரியர் மாணவர் ஜோக்ஸ்
- கணவன் மனைவி ஜோக்ஸ்
- அதிரடி ஜோக்ஸ்
- டாக்டர் பேஷண்ட் ஜோக்ஸ்
- சர்தார்ஜி ஜோக்ஸ்
- கடி ஜோக்ஸ்
- சினிமா ஜோக்ஸ்
- மொக்க ஜோக்ஸ்
- பஞ்ச் ஜோக்ஸ்
- காமெடி ஜோக்ஸ்

## ஆசிரியர் மாணவர் ஜோக்ஸ்

1. **ஆசிரியர்:** புத்தர் சொன்னது போல் நாம் நமது ஐம்புலன்களை அடக்கினால் என்ன ஆகும்?
**மாணவன்:** ஆம்புலன்ஸ் வரும் சார்..

2. **ஆசிரியர்:** மாணவர்களே, எறும்பு பெரிசா? யானை பெரிசா?
**மாணவன்:** அப்படியெல்லாம் சும்மா சொல்ல முடியாது மேடம், பிறந்த தேதி வேணும்.

3. **ஆசிரியர்:** பாபு, எங்கிருந்து எதுவரை முகலாயர்கள் ஆண்டார்கள்?
**பாபு:** 16ம் பக்கத்திலிருந்து 25ம் பக்கம் வரைக்கும் ஐயா!
**ஆசிரியர்:** ????

4. **ஆசிரியர்:** இந்தக் கணக்கை முட்டாள் கூட ஈஸியா செய்திடுவான்.
**மாணவன்:** அது தான் சார் நீங்க ஈஸியா பண்ணிடீங்க!
**ஆசிரியர்:** ????

5. **ஆசிரியர்:** ஒரு மனிதன் உயர வேண்டுமெனில் என்ன செய்ய வேண்டும்?
**மாணவன்:** அந்த மனிதன் ஹை ஹீல்ஸ் செருப்பு போடணும் சார்!
**ஆசிரியர்:** ????

6. **மாணவன்:** கடவுளே, எப்படியாவது நியூயார்க்க இந்திய தலைநகரமா மாத்திரு.
**ஆசிரியர்:** ஏன்டா அப்படி வேண்டுறே?
**மாணவன்:** ஏன்னா நான் அப்படித்தான் பரிட்சையில எழுதியிருக்கேன் அதான்?
**ஆசிரியர்:** ????

7. **ஆசிரியர்:** உனக்கு தமிழ் டீச்சரை பிடிக்குமா... இங்கிலீஷ் டீச்சரை பிடிக்குமா?
**மாணவன்:** எனக்கு வீட்டுக்கு போற பெல் அடிக்கிற தாத்தாவைத்தான் பிடிக்கும் !
**ஆசிரியர்:** ?????

8. **ஆசிரியர்:** 10ஆம் நூற்றாண்டில் உலகம் எப்படி இருந்தது?
**மாணவி:** அப்பவும் உலகம் உருண்டையாதான் இருந்தது ஆசிரியர் !
**ஆசிரியர்:** ???????????

9. **ஆசிரியர்:** ஏண்டா Home Work பண்ணல..?
**மாணவன்:** சார் வீட்டு வேலை எல்லாம் எங்க அப்பாதான் செய்வாரு..!

10. **ஆசிரியர்:** பசங்களா! நாம உயிர் வாழறதுக்கு ரொம்பத் தேவையான ஆக்ஸிஜனை 1773-ல தான் கண்டுபிடிச்சாங்க.
**மாணவன்:** நல்லவேளை ஆசிரியர்! நான் அதுக்கப்புறம் பிறந்தேன். முன்னாடி பிறந்திருந்தா ஆக்ஸிஜன் இல்லாம செத்துப் போயிருப்பேன்.
**ஆசிரியர்:**????????

11. **ஆசிரியர்:** 10 பேர் சேர்ந்து ஒரு கட்டிடத்தை 20 நாள்-ல கட்டறாங்க. அதே கட்டிடத்தை 20 பேர் சேர்ந்து கட்டினா, எத்தனை நாள்-ல கட்டுவாங்க?

**மாணவன்:** ஏற்கனவே கட்டின கட்டிடத்தை ஏன் சார் மறுபடியும் கட்டணும்?

**ஆசிரியர்:** ???????

12. **ஆசிரியர்:** ஏன்டா நாய் படம் வரைஞ்சுட்டு வாய் மட்டும் வரையாம வச்சு இருக்க?

**மாணவன்:** சார்.. அது வாயில்லா பிராணி சார்!

**ஆசிரியர்:** ??????

13. **ஆசிரியர்:** தாமஸ் ஆல்வா எடிசன் பல புதிய கண்டுபிடிப்புக்களைக் கண்டுபிடிக்காமலிருந்தால் என்னவாயிருக்கும்?

**மாணவன்:** வேற ஒருத்தர் கண்டுபிடிச்சிருப்பாரு!

14. **ஆசிரியர்:** தானத்தில் பெரிய தானம் எதுடா?

**மாணவன்:** மைதானம் சார்!

**ஆசிரியர்:** ????????

15. **ஆசிரியர்:** பொய் சொல்லக்கூடாது, பிறர் பொருள் மேல் ஆசை வைக்கக் கூடாது, பிறர் மனம் நோகப் பேசக் கூடாது.

**மாணவன்:** இந்த உலகத்திலேயே வாழக் கூடாதுன்னு சொல்லிடுங்க சார்...

**ஆசிரியர்:** ???????

16. **மாணவன்:** Sir எந்த மாதத்தில் 28 நாட்கள் வருகின்றது?

**ஆசிரியர்:** என்னிடமே கேள்வி கேட்கிறாயா? பிப்ரவரி மாதத்தில் தான்.

**மாணவன்:** இது கூட உங்களுக்கு தெரியல Sir எல்லா மாதத்திலும் 28 நாட்கள் வரும்.

17. **மாணவன்:** செய்யாத தப்புக்கு நீங்க தண்டனை தருவீங்களா சார்?

**ஆசிரியர்:** தரமாட்டேன். ஏன்?

**மாணவன்:** நான் HOME WORK செய்யலை சார்!

18. **வாத்தியார்:** ஏண்டா முழிக்கிற இந்த கேள்விக்கு முட்டா பய கூட பதில் சொல்லிருவாண்டா?

**மாணவன்:** அதான் சார் நா பதில் சொல்லல.

19. **ஆசிரியர்:** டேய் ராமு, இன்னும் பத்து நாளில் உலகம் அழியப்போகுதுன்னு வச்சுக்கோ. அப்போ கடவுள்கிட்டே என்ன வேண்டிக்குவே?

**ராமு:** அன்னிக்கு ஸ்கூல் லீவு விடணும்-னு வேண்டிக்குவேன் சார்..

**ஆசிரியர்:** ???????

20. **ஆசிரியர்:** கும்பகர்ணன் மாதக்கணக்கில் தூங்கினான். இது என்ன காலம்?
**மாணவன்:** அது கொசுவே இல்லாத காலம் சார்..!

21. **மாணவி 1:** நீ ஒரு லூசுடி

**மாணவி 2:** நீ தாண்டி லூசு

**ஆசிரியர்:** அங்க என்னங்கடி சத்தம் இங்க நா ஒருத்தி இருக்கறது உங்க கண்ணுக்கு தெரியலையா

22. **மாணவன் 1:** வர வர நம்ம டீச்சருக்கு ஞாபகமறதி அதிகமாயிட்டே வருது?

**மாணவன் 2:** எப்படிடா சொல்ற?

**மாணவன் 1:** திருக்குறளை நம்ம டீச்சரே போர்டுல எழுதிட்டு இதை எழுதியவர் யாரு? -ன்னு கேட்கறாங்க

23. **ஆசிரியர்:** இந்த Period முழுக்க நீ வெளியில நில்லு அப்போ தான் உனக்கு அறிவு வரும்.

**மாணவன்:** அப்போ நீங்க பாடம் சொல்லி கொடுத்து அறிவு வராதா?

**ஆசிரியர்:** ?????

24. **ஆசிரியர்:** ஏன்டா.... நான் வகுப்புக்குள் நுழையும் போது எல்லாரும் சிரிக்கிறீங்க?
**மாணவன்:** நீங்கதான சார், நேற்று சொன்னீங்க துன்பம் வரும் வேளையிலே சிரிங்கன்னு, அதான்......

25. **ஆசிரியர்:** நீ எதுவரைக்கும் படிக்க ஆசைபடுர
**மாணவன்:** ஸ்கூல் பெல் அடிக்கர வரைக்கும் சார்

26. **ஆசிரியர்:** படிப்பைப் பயன்படுத்தாத தொழில் ஒன்று சொல்லுங்கோ?
**மாணவன்:** அதைக் கூடப் படிச்சால் தானே தெரிய வரும்!

27. **ஆசிரியர்:** இரண்டாம் உலகப்போர் தோன்ற என்ன காரணம் சொல்லு?
**மாணவன்:** முதல் உலகப் போர்ல நிறைய தப்பு செஞ்சுருப்பாங்க, அதையெல்லாம் திருத்தி அடுத்த தடவை இன்னும் நல்லா போரை நடத்தணும்னு முடிவு
**ஆசிரியர்:** ???

28. **ஆசிரியர்:** பறக்கும் தட்டை எங்கே பார்க்கலாம்?
**மாணவன்:** எங்க அப்பா, அம்மா சண்ட போடும் போது பார்க்கலாம் சார்

29. **ஆசிரியர்:** ஒரு தேர்வு எழுதுவதற்கான காகிதம் தயாரிக்க பதினைந்து மரங்கள் அழிக்கப்படுகின்றன. அதனால் நீங்கள் செய்ய வேண்டியது...
**மாணவன்:** இனி நாங்கள் பரீட்சையே எழுத மாட்டோம் சார்.. நீங்க கவலைப் படாதீங்க.

30. **ஆசிரியர்:** 1869-ல் என்ன நடந்தது?
**மாணவன்:** எனக்கு தெரியாது சார்.
**ஆசிரியர்:** மடையா! அந்த வருடம் தான் காந்திஜி பிறந்தார். சரி, அடுத்த கேள்வி! 1873-ல் என்ன நடந்தது?
**மாணவன்:** காந்திஜிக்கு நாலு வயசு சார்.

31. **ஆசிரியர்:** என்னப்பா... எக்ஸாம்க்கு ப்ளம்பரை கூட்டிக்கிட்டு வந்திருக்க?
**மாணவன்:** கொஸ்டீன் பேப்பர் லீக் ஆகுதுன்னு சொன்னங்க, அதான்!!

32. **ஆசிரியர்:** நான் தினமும் ஏழு கிலோ மீட்டர் நடந்து சென்று படித்து வந்தேன்...
**மாணவன்:** அப்பவே உங்களுக்கும் படிப்புக்கும் ரொம்ப தூரமா சார்...

33. **ஆசிரியர்:** ஏன்டா நான் வரும்போது மட்டும் கண்ணாடி போடுற?
**மாணவன்:** டாக்டர் தான் தலைவலி வரும்போது மட்டும் கண்ணாடி போட சொன்னார்!

34. **ஆசிரியர்:** கிணத்துல கல்லைப் போட்டா கல்லு மூழ்கிடும் ஏன்?
**மாணவன்:** ஏன்னா, அதுக்கு நீச்சல் தெரியாது சார்!

35. தேர்வின் கடைசி 30 நிமிடங்களுக்கு முன்னால்..

**ஆசிரியர்:** மாணவர்கள் listen 30 minutes more...

**நண்பன் 1:** வா மச்சான் கிளம்பலாம்...

**நண்பன் 2:** இரு மச்சான்.. 30 நிமிசத்துல மோர் கொடுபாங்களாம் குடிச்சிட்டு போகலாம்..

36. **ஆசிரியர்:** கோபால், உன்னுடைய அப்பா என்ன வேலை செய்கிறார்?
**மாணவன்:** எனக்கு அப்பவாக இருக்குறார் ஆசிரியர்.
**ஆசிரியர்:** ??????

37. **ஆசிரியர்:** அமெரிக்கா எங்கே உள்ளது.
**மாணவன்:** தெரியாது சார்.
**ஆசிரியர்:** பென்ஜின் மேல் ஏறி நில்லுடா.
**மாணவன்:** ஏறி நின்னா தெரியுமா சார்.

38. **ஆசிரியர்:** உன் பக்கத்தில தூங்கறவனை எழுப்பு
**மாணவன்:** தூங்க வைக்கிறது நீங்க, எழுப்புறது நானா? என்ன கொடுமை சார் இது?

39. **ஆசிரியர் 1:** எதுக்கு சார் அந்த பையன பெஞ்ச் மேல நிக்கவச்சு இருக்கீங்க?
**ஆசிரியர் 2:** கட்டபொம்மன தூக்குல போட்ட இடம் எதுன்னு கேட்டா கழுத்துன்னு சொல்றான்...

40. **ஆசிரியர்:** கணக்குப் பரீட்சைல எல்லாக் கேள்விக்கும் ஏணிப்படியை வரைஞ்சு வச்சிருக்கியே, ஏண்டா?
**மாணவன்:** கணக்குல ஸ்டெப்புக்குத்தான் மார்க்குன்னு நீங்கதானே சார் சொன்னீங்க!
**ஆசிரியர்:** ????????

41. **ஆசிரியர்:** உங்க பையன் ஆங்கிலத்தில படுவீக்கா இருக்கான் சார்.
**தந்தை:** தமிழிலே எப்படி இருக்கான்னு சொல்லுங்க சார்.
**ஆசிரியர்:** தங்கள் மகன் ஆங்கிலத்தில் மிகவும் வலுவிழந்து இருக்கின்றான், ஐயா...?

42. **ஆசிரியர்:** அக்கால ஆட்சி முறைக்கும், இக்கால ஆட்சி முறைக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

**மாணவி:** அக்கால ஆட்சிமுறை கல்வெட்டு ஆட்சி. இக்கால ஆட்சிமுறை கட் - அவுட் ஆட்சி.

43. **இண்டர்வியூ அதிகாரி:** உங்களுக்கு MS அலுவலகம் தெரியுமா?

**மாணவன்:** நீங்கள் விலாசம் கொடுத்தால் நான் அங்கே போய் விடுவேன் அவரைப் பார்க்க?

44. **ஆசிரியர்:** ஏசு, கிருஷ்ணர், காந்தி அவர்களுக்குள் உள்ள ஒற்றுமை என்ன?

**மாணவன்:** மூவரும் அரசு விடுமுறை அன்று பிறந்தவர்கள்..

**ஆசிரியர்:** ???????????

45. **வாத்தியார்:** தென்னைமரத்தில இருந்து 6 இலையும், பனைமரத்தில இருந்து 6 இலையும் கீழே விழுது ரெண்டையும் கூட்டினால் என்ன வரும்?

**மாணவன்:** குப்பை தான் சார் வரும்.

46. **ஆசிரியர்:** இரண்டாம் புலிகேசி எப்போது முடிசூட்டிக் கொண்டார்..?

**மாணவன்:** முதலாம் புலிகேசி இறந்த பிறகு சார்..!

47. **வாத்தியார்:** என்னடா ஆறு மார்க் வாங்கிட்டு சிரிக்கிற, உனக்கு வெட்கமா இல்ல?

**மாணவன்:** நான் ஒன்னுமே எழுதல, அதுக்கு போய் ஆறு மார்க் போட்டு இருக்கீங்களே, உங்களுக்கு வெட்கமா இல்ல!

48. **ஆசிரியர் 1:** எதுக்கு பசங்க எல்லோரையும் வாசல்ல உக்காரவச்சு பரீட்சை எழுத வச்சிருகாங்க?

**ஆசிரியர் 2:** எண்ட்ரன்ஸ் எக்ஸாமாம் சார்?

49. **ஆசிரியர்:** கண்டெக்டரிடம் ஒரு ரூபாய் கொடுத்து 90 பைசாவிற்கு டிக்கெட் வாங்கினா மீதி உனக்கு எவ்வளவு தருவாரு?

**மாணவன்:** சில்லரை இல்லைனு சொல்லிடுவாறு?

50. **ஆசிரியர்:** உங்க வீட்டுல மொத்தமா எத்தனை பேரு?

**மாணவன்:** எங்க வீட்டுல மொத்தமா யாருமே இல்லைங்க எல்லோரும் ஒல்லி தான்.

51. **ஆசிரியர்:** பள்ளிக்கூடத்திற்கு கட் அடித்துவிட்டு சினிமாவுக்கு போனியாமே, நாளை உன் அப்பாவைக் கூப்பிட்டு வா...

**மாணவன்:** அவர் படம் பார்க்கலே சார்... கதையை நான் சொல்றேன்...

52. **ஆசிரியர்:** டேய் நல்லா படிச்சா என்னய மாதிரி ஆகலாம்....

**மாணவன்:** அதனால தான் படிக்கவே வெறுப்பா இருக்கு சார்...!

53. **ஆசிரியர்:** கணக்கு பரீட்சை எழுதசொன்ன ஏண்டா டான்ஸ் ஆடுறாய்?

**மாணவன்:** ஒவ்வொரு ஸ்டெப்புக்கும் மார்க் உண்டுன்னு நீங்கதானே சொன்னிங்க சார்.. அதான் ஆடுறேன்..

**ஆசிரியர்:** ????

54. **ஆசிரியர்:** ஏன்? என் கிளாசுக்கு கலர் கலரா நூல் வாங்கிட்டு வந்து வச்சிருக்க?

**மாணவன்:** நீங்கதானே சார் சொன்னீங்க? உங்க வீட்ல இருக்கிற நல்ல நூல்களை நாளைக்கு பள்ளிக்கு வரும்போது கொண்டு வாங்கன்னு.

**ஆசிரியர்:** ???

55. **ஆசிரியர்:** ஏம்மா! பள்ளிக்கூடத்துக்கு வரும்போது இப்படியா தலையை விரிச்சுப் போட்டுட்டு வர்றது?

**மாணவி:** நீங்கதான ஆசிரியர் நேத்திக்கு பூரா பின்னிடுவேன் பின்னிடுவேன்னு சொல்லிகிட்டே இருந்தீங்க ...

**ஆசிரியர்:** ???

56. **தலைமை ஆசிரியர்:** ஏன்டா தமிழ் ஆசிரியர் காலை புடிச்சி வாரி விட்டிங்க?

**மாணவன்:** அவர் தான் 'காலை வாருங்கள்'னு சொன்னார்...

57. **ஆசிரியர்:** வளவளவெனப் பேசி கழுத்தறுப்பவர்களை என்னவென்று சொல்வார்கள்?

**மாணவர்கள்:** (கோரஸாக) வாத்தியார்னு சொல்வோம் !!

**ஆசிரியர்:** ??????????????

58. **ஆசிரியர்:** கோபு நீ மட்டும் ஏன் ஹோம் வோர்க் பண்ணலே?

**கோபு:** சார் நான் ஹாஸ்டல்ல தான தங்கி இருக்கேன்.

**ஆசிரியர்:** ???????????????

59. **ஆசிரியர்:** நேத்திக்கு எதுவரைக்கும் பாடம் நடத்தினேன் சொல்லுங்க?

**மாணவன்:** பெல் அடிக்கிற வரைக்கும் ஆசிரியர் ...

**ஆசிரியர்:** ?????????????

60. **ஆசிரியர்:** ரவி தலையில் எறும்பு ஏறுதுன்னு, ஏண்டா என்கிட்டே சொல்ற?

**மாணவன்:** என் தலையில எதுவும் ஏறாதுன்னு நீங்கதானே ஆசிரியர் சொன்னீங்க?

61. **ஆசிரியர்:** ஏண்டா லேட்?

**மாணவன்:** சார், பஸ்ல அசந்து தூங்கி விட்டேன்!

**ஆசிரியர்:** ராஸ்கல்! கிளாசுக்கு வரதுக்குள்ள அப்படி என்ன அவசரம்?

62. **ஆசிரியர்:** நம்ம பள்ளியில் மொத்தம் 5 மாடிகள் இருக்கு. ஒவ்வொரு மாடிக்கும் 15 படிக்கட்டுகள் இருக்கு. ஐந்தாவது மாடிக்கு போகணும்னா எத்தனை படிக்கட்டுக்கள் ஏறணும்?

**மாணவன்:** எல்லா படிக்கட்டையும் தான் ஏறணும் சார்!

**ஆசிரியர்:** ???????????????

63. **ஆசிரியர்:** உன்கிட்ட நாய் பத்தி கட்டுரை எழுதிட்டு வரச்சொன்ன உன்னோட அண்ணன் எழுதினது மாதிரியே இருக்கே?

**ஜானி:** ரெண்டு பேரும் ஒரே நாய பத்தி தான் எழுதியிருக்கோம் ஆசிரியர் அதான்.

**ஆசிரியர்:** ????

64. **ஆசிரியர்:** வீட்டுப்பாடம் ஏன் எழுதலைன்னு கேட்டதுக்கு எதிர்த்துப் பேசறியே... ஏன்?

**மாணவன்:** நீங்கதானே சார் சொன்னீங்க, எந்த ஒரு பிரச்சனைன்னாலும் சோர்ந்து போயிடாம எதிர்த்துப் போராடணும்னு!

**ஆசிரியர்:** ????

65. **ஆசிரியர்:** உங்கப்பா என்ன வேலை பார்க்கறாரு.

**பையன்:** எங்கம்மா சொல்ற எல்லா வேலையையும் பாப்பாரு ஆசிரியர் .

**ஆசிரியர்:** ?????????????

66. **ஆசிரியர்:** நான் ஒன்னு சொல்லுவேன் எழுந்திருச்சு ஓடக்கூடாது.

**மாணவர்கள்:** ஓகே சொல்லுங்க?

**ஆசிரியர்:** பக்கத்து பெருமாள் கோவில்ல சுண்டல் போடுறாங்க.

**மாணவர்கள்:** ஹே... ஹே... ஓடுங்க?

67. **ஆசிரியர்:** பாபு கண்ணை மூடி சாமி கும்பிட்டியே... என்ன வேண்டிக்கிட்ட?

**பாபு:** இந்த பள்ளிக்கூடத்துல எல்லா வகுப்புகளுக்கும் நீங்களே டீச்சரா இருக்கணும்னு வேண்டிக்கிட்டேன்.

**ஆசிரியர்:** உன்னை மாதிரி மாணவன் கிடைக்க நான் கொடுத்து வச்சிருக்கணும். சரி எதுக்காக இப்படி வேண்டிக்கிட்ட?

**பாபு:** நான் பெற்ற துன்பம் எல்லாரும் பெறட்டுமேன்னு தான்!

68. **ஆசிரியர்:** ஏன்டா உன் புத்தகங்களை எல்லாம் பக்கத்து டேபிள்ள வச்சிட்டு நீ வந்து இங்க உட்கார்ந்திருக்க?

**மாணவன்:** நீங்க தானே சார் பிரச்சனைகளை தள்ளி வைக்கணும்னு சொன்னீங்க?

**ஆசிரியர்:** ????????????????

69. **வாத்தியார்:** போய் சிலபஸ் வாங்கிட்டு வாங்கடா.

**மாணவர்கள்:** சார், தமிழ்நாடு பூரா கேட்டுட்டேன். சிட்டி பஸ் இருக்குன்றான், ஏர்பஸ் இருக்குன்றான், எக்ஸ்பிரஸ் பஸ் கூட இருக்குன்றான், ஆனா நீங்க கேட்ட சிலபஸ் மட்டும் இல்லைன்றான்.

**வாத்தியார்:** ??????

70. **ஆசிரியர்:** டேய் நான் இங்க நாய் மாதிரி கத்திட்டிருக்கேன். அங்க லாஸ்ட் பென்ச்ல எங்கடா ஒருத்தனை காணோம்.

**மாணவன்:** உங்களுக்குப் பிஸ்கட் வாங்கிட்டு வரப் போயிருக்கான் மிஸ்...

**ஆசிரியர்:** ?????

71. **ஆசிரியர்:** என்ன ஆச்சரியமா இருக்கு? நான் எப்ப வெளியே போயிட்டு வந்தாலும் தொண தொணனு சத்தம் போடுவீங்க.. இப்ப இவ்வளவு அமைதியா இருக்கீங்களே.

**மாணவன்:** நீங்க வெளியே போயிட்டு வரும்போது நாங்க அமைதியா இருந்தா வேலையை விட்டுடறேன்னு நேத்து சொன்னீங்களே. மறந்துட்டீங்களா சார்?

**ஆசிரியர்:** ???????????

72. **வாத்தியார்:** இனிமே சிகரெட் குடிச்சுட்டு யாரும் கிளாசுக்கு வரக்கூடாது.

**மாணவன்:** அப்ப கிளாசுக்கு வந்துட்டு சிகரெட் குடிக்கலாமா சார்?

**வாத்தியார்:** ???????????????

73. **ஆசிரியர்:** சூரியன் மேற்கே மறையும். இது இறந்த காலமா? எதிர்காலமா?

**மாணவன்:** அய்யோ சார். சூரியன் மறைஞ்சா அது சாயங்காலம் சார்...

**ஆசிரியர்:** ???????????????

74. **மாணவி:** என்னது பரீட்சைக்கு முதல் நாள்தான் தயார் பண்ணுவியா...! போதுமா அது?

**மாணவன்:** பிட் தயார் பண்றதை ஒரு வாரத்துக்கு முந்தியா செய்ய முடியும்?

**மாணவி:** ????

75. **ஆசிரியர்:** உன் பேர் என்ன?

**மாணவி:** பொன்னி மிஸ்.

**ஆசிரியர்:** ஸ்வீட் நேம்.

**மாணவி:** ஸ்வீட் நேம் இல்ல மிஸ், ரைஸ் நேம்.

76. **ஆசிரியர்:** பசங்களா கேளுங்க எந்த உணவையுமே காச்சி சூடா வெச்சாத்தான் பாக்டீரியா தங்காது.

**மாணவர்கள்:** போங்க ஆசிரியர் அப்படி பார்த்த பூமியே பயங்கர சூடா தானா இருக்கு, எல்லா பாக்டீரியாவும் செத்து இருக்கனும்ல.

**ஆசிரியர்:** ??????????????

77. **ஆசிரியர்:** ரேடியோவை கண்டுபிடிச்சவர் MARCONI

**மாணவன்:** எங்கள் வீட்டிலையும் ஒரு ரேடியோ காணாமல் போச்சு சார். அவர் வந்து கண்டுபிடிச்சு கொடுப்பாரா?

**ஆசிரியர்:** ?????

78. **ஆசிரியர்:** பாடம் எல்லாம் முடிஞ்சிப் போச்சு.. ஏதாவது சந்தேகம் இருந்தா கேளுங்க.. எதுவா இருந்தாலும் தயங்காமக் கேளுங்க..

**மாணவன்:** சார் உங்க பொண்ணு பேரு என்ன சார்.

**ஆசிரியர்:** ????????????

79. **ஆசிரியர்:** நிலநடுக்கம் எப்ப வரும்?

**மாணவன்:** பூமிக்குக் குளிரும் போது வரும் ஆசிரியர்

**ஆசிரியர்:** ????

80. **மாணவி:** சீதா பேனாவை யாரோ தூக்கிட்டுப் போயிட்டாங்க ஆசிரியர்!

**ஆசிரியர்:** இராவணன் தான் தூக்கிட்டுப் போயிருப்பான்! அவன் ஏற்கனவே சீதாவைத் தூக்கிட்டுப் போன களவாணி!

**மாணவி:** ????????????

81. **ஆசிரியர்:** என்னடா ஓட்டப் பந்தயத்துக்கு வரும்போது கையில தீப்பந்தத்தோட வந்திருக்க?

**மாணவன்:** நீங்க தானே சார் சொன்னீங்க.. ஜெயிக்கணும்னா ஒரு பயர் வேணும்னு அதான் சார் கொண்டு வந்தேன்.

**ஆசிரியர்:** ???????????

82. **ஆசிரியர்:** இந்தப் பறவையோட காலைப் பார்த்து இது என்ன பறவைன்னு சொல்லு...

**மாணவன்:** தெரியலை சார்.!

**ஆசிரியர்:** இது தெரியலியா? நீயெல்லாம் உருப்படவா போற! உன் பேரு என்னடா?

**மாணவன்:** என் காலைப் பார்த்து நீங்களே சொல்லுங்க சார்..!!

**ஆசிரியர்:** ??????????